**நாள்**: 01.12.2025

O.S. No. 60/2022

**பி.சா.1**

**பெயர்: ராமன் , த/பெ. வெங்கடாஜலம்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

நான் எதிருரையில் சொல்லியிருப்பதுபடி தாவா சொத்தை விற்பனை செய்யும் எண்ணம் வாதிக்கு கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எக்காலத்திலும் சாகுபடி செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அன்னியில் தாவா கிராமத்தில் எனக்கு இதர நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்குரியது அல்ல என்றாலும், எனக்கு சொந்தமான இதர நிலங்களுக்கு உரியது என்றாலும் அவை என் அனுபவத்தை நிரூபிக்க பயன்படாது என்றாலும், வழக்கிற்கு பிற்பட்டு ஏற்பட்டவை என்றாலும் சரியல்ல.

வாதி ராமச்சந்திரன் திருவாரூரில் வசித்து வருகிறார் என்பதால் அதை சாதகமாக கொண்டு தாவா சொத்தை நான் ஆக்கிரமிக்க முயற்சித்த காரணத்தால் அதை தடுக்கும்பொருட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்து வருவதாக வழக்குரையில் கூறப்படவில்லை என்றாலும், வழக்குமூல தேதியில் ஆக்கிரமித்தது தொடர்பாக குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள என்னுடைய நீண்ட கால அனுபவம் தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எக்காலத்திலும் என்னுடைய

அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும், வாதி எக்காலத்திலும் என்னிடம் தாவா சொத்தினை குத்தகை சாகுபடிக்கு கொடுக்கவில்லை என்றாலும், தாவா சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தில் நான் இடையூறு ஏற்படுத்தியதாலேயே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.12.01 17:45:21 +0530